


**08. 07. 2025**

**தலைப்பு செய்திகள்**

**1.** பிரதமர் திரு.நரேந்திரமோடி பிரேசில் அதிபருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை பிரசிலியா நகரில் இன்று மேற்கொள்கிறார்.

**2.** முப்படைகள் இணைந்து செயலாற்றுவதற்கான வாய்ப்புகள் குறித்து இதன் தலைவர்கள் புதுதில்லியில் இன்று விரிவான ஆலோசனைகளை மேற்கொண்டனர்.

3. கடலூர் அருகே செம்மங்குப்பத்தில் பள்ளி வேன் மீது பயணியர் ரயில் மோதிய விபத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தமிழக அரசும், ரயில்வே துறையும் தலா 5 லட்சம் ரூபாய் நிவாரணம் அறிவித்துள்ளன.

**4.** தமிழக திருக்கோவில்களின் ஓலைச்சுவடிகளை டிஜிட்டல் மயமாக்கும் பணிகள் அறநிலையத்துறை உதவியுடன் மேற்கொள்ளப்படுவதாக மாநில அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

**5.** உலக கோப்பை வில்வித்தை நான்காம் கட்ட போட்டிகள் ஸ்பெய்ன் மேட்ரிட்டில் இன்று தொடங்குகின்றன.

**இனி விரிவான செய்திகள்**

*********

**பிரதமர்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி பிரேசில் அதிபர் **Luiz** Inacio Lula Da Silva-வுடன் தலைநகர் பிரசிலியாவில் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி, விண்வெளி தொழில்நுட்பம், வேளாண்மை, சுகாதாரம், மக்கள் சார்ந்த உறவுகள் குறித்த பேச்சுவார்த்தைகள் இதில் இடம்பெறும்.

இந்த பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து இருநாடுகளுக்கிடையே 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன.

முன்னதாக பிரசிலியா சென்ற பிரதமருக்கு விமான நிலையத்தில் அந்நாட்டின் பாரம்பரிய சம்பா நடனம் மற்றும் பேண்ட் இசையுடன் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த இசை ஆப்பிரிக்க பிரசிலிய நட்புறவை முன்னெடுத்துச்செல்லும் ஒருங்கிணைந்த முயற்சியாக உள்ளது என்று பிரதமர் பாராட்டினார்.

இந்திய வம்சாவளியினரும் விமான நிலையத்தில் பிரதமரை அன்புடன் வரவேற்றனர்.

தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு குறித்து நெகிழ்ச்சி வெளியிட்ட பிரதமர் இந்திய வம்சாவளியினர் தங்களின் வேர்களுடன் இணைந்திருப்பதாக புகழாரம் சூட்டினார்.

பிரதமர் பிரேசில் பயணத்தை முடித்துக்கொண்டு தமது 5 நாடுகள் பயணத்தின் இறுதிகட்டமாக நாளை நமீபியா செல்கிறார்.

*********

**நிர்மலா சீதாராமன்**

உலக அளவில் தென்னாடுகளின் குரலை எதிரொலிக்கச் செய்யும் தளமாக பிரிக்ஸ் நாடுகள் திகழ்வதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

ரியோடி ஜெனிரோவில் பிரிக்ஸ் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் நிதி கட்டுப்பாடுகள், சந்தை பன்முகப்படுத்தல், வளர்ச்சி ஊக்குவித்தல் உள்ளிட்ட பல்வேறு சீர்திருத்தங்களால் இந்தியாவின் சிறப்பான செயலாக்கத்தை சுட்டிக்காட்டினார்.

இந்த கூட்டத்தின் ஒருபகுதியாக ரஷ்யா மற்றும் சீன நிதியமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் திருமதி நிர்மலா சீதாராமன் மேற்கொண்டார்.

*********

**முப்படைகள்**

முப்படைகள் இணைந்து செயலாற்றுவதற்கான வாய்ப்புகள் குறித்து புதுதில்லியில் ராணுவ அதிகாரிகள் இடையே முப்படை தலைவர்கள் இன்று உரையாற்றினர்.

இதற்கான வாய்ப்புகளை முன்னெடுத்து செல்ல இந்த கூட்டத்தில் உறுதி ஏற்கப்பட்டது.

கடல்சார் பாதுகாப்பு, வான் பாதுகாப்பு, எதிர்கால போர் சம்பவங்களில் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் குறித்து இதில் விரிவாக ஆராயப்பட்டது.

கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி

விமான படை தலைவர் ஏர்.சீ.ஃப் மார்ஷல் ஏ.பி.சிங்

ராணுவ தலைவர் ஜென்ரல் உபேந்திரா திவேதி உள்ளிட்டோர் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

*********

**ஹுமைத் மொகமத் அப்துல்லா**

ஐக்கிய அரபு எமிரேட்டின் கடற்படை கமாண்டர் மேஜர் ஜென்ரல் ஹுமைத் மொகமத் அப்துல்லா அரசு முறை பயணமாக இந்தியா வந்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள தேசிய போர் நினைவு சின்னத்தில் அவர் இன்று மரியாதை செலுத்தினார்.

கடற்படை தலைமை தளபதி உள்ளிட்ட அதிகாரிகளை திரு.ஹுமைத் நாளை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

*********

**விபத்து**

கடலூர் அருகே செம்மங்குப்பத்தில் இன்றுகாலை ரயில்வே லெவல் கிராசிங்கை கடக்க முயன்ற பள்ளி வேன் மீது விழுப்புரம் - மயிலாடுதுறை பயணியர் ரயில் மோதியதில் 3 பேர் உயிரிழந்தனர்.

இதில் இருவர் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த மாணாக்கரின் பெற்றோருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 5 லட்ச ரூபாய் உடனடியாக வழங்க முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

பலத்த காயமடைந்து சிகிச்சை பெறுபவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும்,

லேசான காயம் அடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கவும் முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

இவ்விபத்தில் உயிரிழந்த மாணாக்கரின் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொண்டுள்ளார்.

**இதனிடையே ரயில்வே சார்பிலும் உயிரிழந்த** மாணாக்கரின் குடும்பத்திற்கு 5 லட்ச ரூபாய் வழங்கப்படும் என்று தெற்கு ரயில்வேயின் திருச்சி கோட்ட மேலாளர் தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

இந்த சம்பவம் அதிர்ச்சியும் வேதனையும் அளிப்பதாக மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி, அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி, பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோரும் இச்சம்பவத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் விபத்தில் காயமடைந்தவர்களை மாநில அமைச்சர் திரு.சி.வி.கணேசன் மருத்துவமனையில் நேரில் சந்தித்து பேசினார்.

இந்த சம்பவத்தின் எதிரொலியாக ரயில்வே கேட் காவலர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதோடு, உயர் விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

*********

**சேகர்பாபு**

தமிழ்நாட்டில் திருக்கோவில்களின் ஓலைச்சுவடிகளை டிஜிட்டல் மயமாக்கும் பணிகள் அறநிலையத்துறை உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்தகட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஓலைச்சுவடிகளை பொதுமக்களின் பார்வைக்கு வைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமண்யசுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ள நிலையில், முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்தும் அமைச்சர் திரு.சேகர்பாபு இன்று ஆய்வு மேற்கொண்டார்.

2 கோடியே 37 லட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

**வாய்ஸ்**

- *********

**அமைச்சர்கள்**

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி பெரியண்ணநல்லூர் கிராமத்தில் 44 கோடி ரூபாய் மதிப்பில் ஜவுளிப்பூங்கா அமைப்பதற்கான பூர்வாங்க பணிகளை, மாநில அமைச்சர்கள் திரு.எ.வ.வேலு, திரு.காந்தி, ஆகியோர் இன்று தொடங்கிவைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் திரு.எ.வ.வேலு, ஆரணியில் உற்பத்தியாகும் பட்டு, பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் நிலையில் இப்பகுதியில் பட்டுப்பூங்கா அமைக்கப்படுவதாக கூறினார்.

ஆரணி பகுதி நெசவாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் வகையில், பூங்கா அமைக்கப்படுவதாக கூறிய அமைச்சர் திரு.காந்தி, நெசவாளர்கள்

ஒத்துழைத்தால் அரசு மானியத்தொகையில் மினி கைத்தறி பூங்கா அமைத்து தரப்படும் என்றார்.

*********

**இருவரி**

**திருச்சி திருவாரூர் மாவட்டங்களில் பல்வேறு** நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக முதலமைச்சர் வர உள்ளதை அடுத்து நாளையும் நாளைமறுநாளும் இவ்விரு மாவட்டங்களிலும் ட்ரோன் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வி.சரவணன் தெரிவித்துள்ளார்.

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 6 முதல் 12ஆம்** வகுப்பு வரையிலான அனைத்து பள்ளி மாணாக்கருக்கு கட்டுரை மற்றும் பேச்சு போட்டிகள் வரும் வெள்ளிக்கிழமை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற உள்ளதால் மாணாக்கர் இதில் பங்கேற்குமாறு ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் அறிவுறுத்தியுள்ளார்.

**நாமக்கல் மாவட்டத்தில் அரசு நல திட்ட** கையேடுகள் வழங்கும் பணிகளை ஆட்சித்தலைவர் திருமதி துர்கா மூர்த்தி இன்று தொடங்கிவைத்தார்.

பொதுமக்களுக்கு அரசின் 13 துறைகளில் 43 சேவைகளை பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து இதில் விளக்கம் அளிக்கப்பட்டது.

**தர்மபுரி அரசு கலைக்கல்லூரியில் ஊரக** வாழ்வாதார இயக்கம் சார்பில் கல்லூரி சந்தையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் இன்று தொடங்கிவைத்தார்.

*********

**மீன்குஞ்சுகள்:**

வைகை அணையில் மீன் வளத்தை பெருக்கும் வகையில், மீன் வளத்துறை சார்பில், ஒன்றரை லட்சம் மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளதாக எமது தேனி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

*********

**கோவில்**

**நெல்லை அருள்மிகு நெல்லையப்பர்** காந்திமதியம்பாள் ஆனி பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

**சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை** அருள்மிகு சொர்ணமூர்த்தீஸ்வரர் திருக்கோவில் திருத்தேரோட்டமும் இன்றுகாலை சிறப்பாக நடைபெற்றது.

பல்வேறு கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் இதில் பங்கேற்று சுவாமி தரிசனம்செய்தனர்.

*********

**மேட்டூர்**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 28 ஆயிரம் கன அடியாக உள்ளது.

அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்கு 22 ஆயிரத்து 100 கன அடி நீரும்,

உபரி நீர் போக்கி வழியாக 5 ஆயிரத்து 400 கன அடி நீரும் வெளியேற்றப்படுகிறது.

**ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று** வினாடிக்கு 28 ஆயிரம் கன அடியாக உள்ளது.

*********

**வானிலை**

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்றும் நாளையும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பலத்த தரைக்காற்று 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

*********

**வில்வித்தை**

உலக கோப்பை வில்வித்தை நான்காம் கட்ட போட்டிகள் ஸ்பெய்ன் மேட்ரிட்டில் இன்று தொடங்குகின்றன.

வரும் 13ஆம் தேதிவரை நடைபெறும் இப்போட்டியில் இந்தியாவின் தீபிகாகுமாரி, ஜோதி சுரேகா உள்ளிட்ட 16 பேர் கொண்ட அணி களமிறங்குகிறது.

இப்போட்டிகளில் வெற்றிபெறும் வீரர்கள் வரும் அக்டோபர் மாதம் சீனாவில் நடைபெறும் உலக கோப்பை வில்வித்தை இறுதிபோட்டிக்கு தகுதிபெறுவர்.

*********

**கிரிக்கெட் டெஸ்ட்**

இந்திய இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன் லார்ட்ஸில் நாளை மறுநாள் தொடங்குகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று சம நிலையில் உள்ளன.

*********

**கிரிக்கெட்**

இந்திய இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கிடையிலான 4ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி Manchester-இல் நாளை நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா 2-1 என்ற கணக்கில் தற்போது முன்னிலையில் உள்ளது.

5ஆவது கடைசி 20-20 கிரிக்கெட் போட்டி வரும் சனிக்கிழமை பர்மிங்ஹாமில் நடைபெற உள்ளது.

இரு அணிகளுக்கிடையே 3 ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளும் நடைபெற உள்ளன.

*********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**